போஸ்டு ரி. நெ. 819.

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௩. } விரோதகிருது௵ பங்குனிமீ { பகுதி ௧௨.

பொருளடக்கம்.

சுதேசாபிமானம்—பத்திராதிபர்.	௩௬௭
நல்லொழுக்கம—ராம, சுப்பையாசெட்டியார்	௩௭௧
சிவனடியார் பெருமை—T. S. தியாகராஜஞானியார்.	௩௭௪
தர்மா தர்ம சம்வாதம—வ. யி. சுப்பையாசெட்டி, ப, கி. சேதுராயன்.	௩௭௬
மாலினி மாதவும்—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A , B. L.	௩௮௧
முத்ராராக்ஷஸம்—R. ஸேதுநாராயண சர்மா B. A., B. L.	௩௮௮
நாம் உண்பதேன்?—N. சோமசுந்தரையர் B. A. L. T.	௩௯௧
நகரத்தார் சீர்திருத்தத்தைப்பற்றிய நல்லபிப்பிராயம்— } ஜே. எம். நல்லசாமி பிள்ளை	௩௯௩
நகரத்தார் சபைகளும், பிரசங்கங்களும்—கண்டனூர் வாசி.	௩௯௫
ஸர் ஐஸாக் நியூடன்—S. நாராயணன் B. A., L. T.	௩௯௭
புத்தகக்குறிப்பு—பத்திராதிபர்.	௩௯௮
சமாசாரக்கொத்து—பத்திராதிபர்.	௪௦௦

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ. இரண்டுதான்.
மாணாக்கர்கட்கு௵சந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணா 3.
மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப் பெற்றது.

வித்தியாபாநு விளம்பரம்.

இதை நினையுங்கள்:

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அ தா வ து,

ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகரும்

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

எ ெ ன னி ல்,

நம்மவர்களுக்கு பஸந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத்தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளே அனுப்பப்படு மென்பது திண்ணம்.

42 இஞ்சு அகலம்
8 கஜம் நீளம் } புடவை 1க்கு விலை ரூ 25 முதல் ரூ 50 வரை.

42 இஞ்சு அகலம்
20 இஞ்சு நீளம் } ரவிக்கை 1-க்கு விலை ரூ 2—8—0 முதல் ரூ 5 வரை

எங்கள ஜெனரல் கேட்லாக் இனமாக அனுப்புவோம். எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்)

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி. Benares City.

உ

குமரன் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத்

தமிழ்ப்பத்திரிகை.

மூன்றாந் தொகுதி.

பத்திராதிபர் { ம. கோபாலகிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர், புரொப்ரைட்டர்.

வருஷ சந்தா ரூபா இரண்டு தான்.

மாணாக்கர்கட்கு வருஷசந்தா ரூ ஒன்றே.

"வித்தியாபாநு" ஆபீஸ், வடக்காவணிமூலவீதி, மதுரை.

1912௵ எப்பிரல்௴

விவேகபாநு அச்சியந்திரசாலை.

மதுரை.

உள்ளுறை.	விஷயதானஞ்செய்தோர்.	பக்கம்.
வாகீசப்பிரபாவம்	மு. சாம்பசிவநாயனர்	எங
வாழ்த்துப்பத்திரிகை	அம்பலவாணநாவலசுவாமிகள்	சஅ
வாழ்த்துப்பாக்கள்	ஜி. சதாசிவம்பிள்ளை	ருக
விருந்தோம்பல்	சி. மு. இலக்குமணச்செட்டியார்	அஅ
ஜாதிவேற்றுமை	தில்லைவாணன்	ஙஙஅ
ஸர்ஜஸக்கியூடன்	S. நாராயணன் B. A. L. T.	உகூக, ஙருங, ஙகஎ
ஸ்ரீ அம்பலவாணதேசிக புத்தகசாலை நாகைத் தமிழ்ச்சங்கத்தின்வருஷபூர்த்திக்கொண்டாட்டம்	ம. கோபால கிருஷ்ணையர்	உஎ0
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகசுவாமிகள் கொடைமாட்சிக் கவிகள்	ரா. இராகவையங்கார்	ஙரு
ஸ்ரீ பொ. பாண்டித்துரைசாமியவர்கள் பிரிவாற்றுமை பற்றியஇரங்கற்பாக்கள்	மு. ரா. அருணசலக்கவிராயர்	உருஎ
	மு. ரா. கந்தசாமிக்கவிராயர்	உகூக
	திரு. இராமசாமி ஐயங்கார்	உகூங
	சர்க்கரை இராமசாமிப்புலவர்	உகூச
ஸ்ரீமத். மு. கதிரேசசெட்டியாரவர்கள் விவாகமும் பிரசங்கங்களும்	பத்திராதிபர்	ஙஉரு
ஸ்ரீமத். வே. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் மீது இரங்கற்பாக்கள்	ம. கோபால கிருஷ்ணையர்	ஙகூச

பத்திராதிபர்.

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

௳

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி க. } விரோதகிருது ளூ பங்குனி மீ { பகுதி கஉ.

சுதேசாபிமானம்.

(305-ம்பக்கத் தொடர்ச்சி)

இனி நமது தாய் நாடாகிய இந்தியா சம்பந்தப்பட்ட மட்டில தேசாபிமான விஷயமாய்ச் சில கூறி, இவ்வியாஸத்தை நிறுத்துவோம்.

நமது பரத கண்டத்தில் வசிக்கும் இந்தியனாகட்டும், மகமதியனாகட்டும், பார்ஸியாகட்டும, வேறு எந்த ஜாதியானாகட்டும் தேசாபிமானியாக இருக்கமுடியாதென்றும், இந்தியா ஆங்கிலர் வசமாகி விட்டபடியால் அதில்வசிக்கும் இந்தியர்களுக்கு என்று சொந்த தேசம் ஏதும் கிடையாதென்றும் எண்ணுகிறார்கள் சிலர். வேறு சிலரோ, தம் உற்பத்திக்குக் காரணமாகிய தாய்நாட்டிற்குத் தொண்டு செய்வதை ஒழித்துத் தம்மை ஆளும் நாட்டிற்குத் தொண்டு பூண்டொழுகி அதன் பால் அபிமானம பாராட்டவேண்டுமென்கின்றனர். இவ்விரு திறத்தாரது அபிப்பிராயமும் ஒப்பத்தக்கனவல்ல. ஏனெனில் ஆள்வார் யாராயிருந்தாலும் ஸ்வதேசம் பரதேசம் ஆகிவிடுமா? மாதா வயிற்றெரிய மகேசுவர பூஜை செய்வதுதான் சரியா? சுவாதந்தரிய நாடுகளுக்கெல்லாம் தாய்நாடெனத்தகும் தன்மை வாய்ந்ததும் அடிமைத்தனத்தை அறவே ஒழித்து வருவதுமான இங்கிலாந்து இவ்விரு திறத்தாரது அபிப்பிராயத்தையும் சரியான

வை என்று ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளமாட்டாது. பல கூறுவா னேன்? இந்தியன் சுதேசாபிமானியாக இருத்தல் கூடும்.

> "கால மறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
> மூல மறிந்து விளைவறிந்து-மேலுந்தான்
> சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
> ஆள்வினை யாளப் படும"

என்பதைக் கடைப்பிடித்து எவ்வாறு நடந்துகொண்டால் உண்மை யில் தேச நலத்தை யடையலாகுமோ அவ்வாறு நடந்து புரவலர்க் கும் பொதுஜனர்க்கும் நன்மை புரிபவனே உண்மைத் தேசாபிமானி யாவன்.

இத்தகைய தேசாபிமானிகள் நம் நாட்டில் இன்றைக்கும் இல் லாமற் போய்விடவில்லை. இவ்வபிமானிகள் நாள்தோறும் தேச க்ஷே மத்திற்காகப் போராடிய வண்ணமாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் போடும சண்டை வாட் படை கொண்டன்று. வாளினும் வலியதாகிய வாகதும் எழுதுகோலுமே அவர்கள் பிடித்துள்ள ஆயு தங்கள். இந்தியாவின் மாப்பெருங் கிழவனென்று பல்லோரும் புகழும் தாதாவாய் நின்றிலகும் ஸ்ரீமான்களாகிய தாதாபாய்நௌ ரோஜி, கோபாலகிருஷ்ணகோகலே, ஆநந்தமோகன்போஸ், ராஜா ராம்மோகன்ராய், சுரேந்திரநாத்பானர்ஜி முதலியோர், தமதுகாலம், பொருள், சுகம் முதலியன கருதாது போடும் சண்டை, முற்காலத் திய தேசாபிமான மிகுத்த போர்வீரன் போடும் சண்டைக்கு நிகரா கவே கூறலாம். ஆனால் இவ்விருதிறத்தாருடைய சண்டைக்கும் வித்தியாசம் உண்டு. அஃதென்னவெனில், போர்வீரன் தனது ஜன்ம சத்துருவுடன் சண்டை போடுகிறான். இந்தியா தேசாபி மானிகளோ தமக்குமனப்பூர்வமாக நன்மையே புரிய விரும்பும் ஆங் கில துரைத்தனத்தாரோடு சிநேகச் சண்டைபோடுகின்றனர் நிற்க,

> "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில்"

என்பதை மறந்து சிலர் அரசாங்க முறையைக் கண்டபடி தூஷிப்ப தே தேசாபிமானமென்றும், அவ்வாறு தூஷிப்பவனே உண்மைத் தேசாபிமானி யென்றும் தவறாகக் கருதுகின்றனர். ஈதென்ன

மௌடீகம்!, அநியாயமையினாலோ, போலிப்புகழ்ச்சி விரும்பியோ அநியாயமாய் அரசாங்கத்தாரைப் பகைத்துச் சமாதானமுற்று வாழுங் குடிகளின் மனத்தைத் தன்னால் இயன்றவாறெல்லாம் கலைத்து அவர்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு சதியாலோசனை புரிந்து ராஜாங்கத்தைக் கவிழ்க்கமுயற்சிப்பவன் உண்மைத்தேசாபிமானியாகான். இவனுக்கும் கண்மூடித்தனமாய்த் தான் சாகஉபாயம் தேடுவோனுக்குமவித்தியாசமேயில்லை. இவன் தான்கெடுவதுமன்றிப் பிறரையும் அரசாங்கத்தினரது தண்டனைக்கும், "தியா" என்று அவர்களாற் கருதப்பட்டு அவர்களின் தீராச் சந்தேகத்திற்கும் உட்படுத்தக் காரணனாகின்றான்.

இத்தகைய சமுசயங்களால் நிரபராதிகளான எத்தனை ஏழை ஜனங்களும், செல்வமும் செல்வாக்கும் படைத்த சீமான்களும் அநியாயமாய் அரசதண்டனைக்கு ஆளாகியும், அரும்பொருள் இழந்தும், அவமானத்திற் குள்ளாகியும் அவஸ்தைப்பட்டிருக்கின்றனர்! இக்காரணங்களைப்பற்றி அர்சாங்கத்தாரை அக்கிரமவழியிற் பகைப்பவனைத் தேசத்திற்குத் "தீங்குபுரிபவன்" என்றுகருதவேண்டுமேயன்றி, "அபிமானி" என ஒருக்காலும் கருதக்கூடாது.

அரசாங்கத்தார் செய்கையில் தவறுதல்கள் உண்டாவது சகஜமே. அதற்காக அவர்களைக் கண்டித்தலும் நியாயமே. ஆயினும அக்கண்டனை ஒழுங்குக்கு விரோதமின்றி இருத்தல்அவசியம். நியாயத்திற்கு விரோதமாகக குடிகளின் மீது இங்கிலாந்து தேசத்தரசனான முதலாவது சார்லஸ் "கப்பல் வரி" (Ship Money)யைச் சமத்திய காலத்தில் பார்லிமெண்டோடு தைரியமாய் எதிர்த்துப் போராடிச்சிறையிலடைபட்ட ஜான்ஹாம்டனை "இராஜ துரோகி" என்று எவரும் சொல்லாமல் உத்தம தேசாபிமானி" யென ஆங்கிலேயராதியோர் இன்னும் புகழ்கின்றனர். இதற்குக் காரணம் அரசனோடாயினும் அவன் நியாயவழியில் போட்ட சண்டையே.

இதுகாறும் கூறியவாற்றால் தன்தேசத்தின் பொருட்டு யுத்தத்தில் பிராணனை விடுக்கும் சுத்தவீரனும், பொது நன்மையை நாடி அரசாங்கத்தினரை நேரிய வழியில் எதிர்க்கும் நாவன்மைபடைத்தோனுமே தேசாபிமானிகள் என்றுஎவரும் எண்ணற்க. கோமானே

குடியானவனே, ஏழையோ, பணக்காரனே, பண்டிதனே, பாமரனே, இளையனே, முதியனே, ஸ்திரியோ, புருஷனே, ஆஸ்திகனே, நாஸ்திகனே, யாராயிருந்தாலும் சரி தத்தம் நிலைக்கும் முடிமைக்குந்தப்பாதே, ஒத்த கடப்பாட்டிற்குளூன்றி, எய்த்தும், அழுங்கடையிற் செல்லாராகியும் பிறன் பொருளும் வெஃகாராகியும் தன் பொருள் மனமொழி மெய்யாகியவற்றால் ஜனசமூக வாழ்க்கைக்கின்றியமையாத லோகோபகாரச செயல்களை அறிந்துபுரிந்து உத்தம தேசாபிமானிகளாவதில் தடையேதும் இல்லை. இத்தகைய உண்மைத் தேசாபிமானிகள் நம்நாட்டில் மேன்மேலும் பல்குமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளையும் பாரத மாதாவையும் பக்தி பூர்வமாக வேண்டுகின்றோம்.

வாழிய! பண்டைப்பெயரே வாய்ந்திடுமா வளநாடே!
மாசில் தூய்மை
சூழிசை சேர் பாரதமே! தாயகமே! தூயவெலாம்
தோன்றும் பூவே!
பாழிய நின் பெருந்தகைமைப் பான்மையையாம்
பயில அருள் பாலிப்பாய் நீ
ஆழிபுளை எவ்வுயிர்க்கும் ஆருயிரே! நினதுரிமை
ஆம் எம் உள்ளம். (1)

எக்காலும் ஞானியர்கள் இருந்தியங்கும்
இயல்புடைய எங்கள் நாடே!
முக்கரிலங் கலுமுணர்வோர் முனிவரர்கள்
முது மறைகள் மொழியும் நாடே!.
அக்காலத் தியநினது மகிமை யெலாம்
அன்றே போல் அணிபெற்றோங்க
இக்காலம் ஐந்தாம்ஜார்ஜ் இறையவனார் அரசாட்சி
இனிதாய் வாழ்க! (2)

பத்திராதிபர்.

நல்லொழுக்கம்.

—*—

ஒழுக்கம் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என இருவகைப்படும். அவற்றுள் ஈண்டுக்கூறப்படுவது நல்லொழுக்கம். அஃதாவது அறநூல்கள் விதித்தவற்றையறிந்து அவ்வாறே ஒழுகும் ஒழுக்கமாம்.

இது பகுத்தறியும் அறிவுள்ள மானிடவகுப்பைச்சார்ந்த நம்மனோர்க்கெல்லாம் இன்றியமையாதது. இன்றேல், ஐயறிவுள்ள விலங்கின் வகுப்பினுங் கடையராவோம்.

இழிந்த குலத்திற்றோன்றினோர் சாதிசண்டாளரென்றும் தம் குடிப்பிறப்பிற்கு அடாத செயல்களைச் செய்வோர் கர்மசண்டாளரென்றுங் கூறப்படுவார். அவ்விருவகுப்பினருள் கர்மசண்டாளருக்கு எக்காலத்துங் கழுவாயின்மையின் அன்னோர் எஞ்ஞான்றும் இடையறாமல் நரகத்தில் இடர்ப்படுவர். சாதியியல்பாற் சண்டாளராய அவரினும் கர்மசண்டாளர் கடைப்பட்டவராவார். ஆதலால் தத்தமக்கு ஓதப்பட்ட ஒழுக்க நெறியினின்றும் தவறலாகாது.

ஒழுக்கத்தைச் சின்னாட்கையாடிவந்து சின்னாள் ஒழிந்திருப்பினும் பயனின்று. தைலத்தின் ஒழுக்குப்போல இடையறாது ஒழுகுதல் ஒழுக்கத்துக்கு இலக்கணமாகும். இது நிற்க,

பொய்யாமை, கொல்லாமை, பிறர்மனைநயவாமை, புறங்கூறாமை, அருந்தவர்ப்பேணல், விருந்துபசரித்தல், ஆலயதரிசனம், ஈசுரபக்தி முதலிய இன்னோரன்னவை நல்லொழுக்கங்களின்பாற்படுமே.

ஒழுக்கமுடையார் எல்லாரும் உயர்வடைவர். ஒழுக்கத்தினின்றும் இழுக்கியோர் தாம் எய்துதற்குரியவல்லாத பழிகளையும் எய்துவார். எங்ஙனமெனில் ஒருகாற் றிருடியவன் ஒருவன் மற்றொருகாற் றிருடாதிருப்பவும் ஆகாதார் பலருங்கூடி 'இவனே திருடினன்' எனக்கூறுநிற்புழி இவன்முன் திருடியவனாகையால் இப்பொழுதும் திருடியிருப்பான் என்று பிறரும் துணிதற்கு இடமாகின்றது. ஆகையால் எப்பொழுதுமே ஒழுக்கத்தில் இழுக்கங்கூடாதென்பதுபெற்றாம். இதனை,

"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி." என்பதனானறிக.

தாம் வறியராயிருக்கும் காரணம்பற்றிக் குடிப்பிறப்பிற்கு ஆகாத செயல்களைச் செய்தேனும் அவ்வறுமையை நீக்கவேண்டுமென்று முயல்வார் பலருண்டு. இது குளிக்கச்சென்றவொருவன் சேற்றைப்பூசி வந்ததனோடொக்கும். அவரினின்றும் வறுமை ஒருநாளும் ஒழியாது. எவ்வகை வறுமையுற்றுழியும் ஒருபோதும் ஒழுக்கத்தில் தவறுதலாகாது. பிறர் தம்மை வைத விடத்து அதனைப் பொறுத்தலுமன்றி நம்மை வைத பாவத்திற்காக இவர் எரிவாய் நிரயத்துற்று இடர்ப்படுதல் சம்பவிக்குமே என்று அவர் பொருட்டு இரங்குதலும், நல்லொழுக்கத்தின் பாற்படும்.

"மறையவர்ச்செகுத்தோர்மாமதுநுகர்ந்தோர்
தன்மனையிருக்கப்பரத்தையைப்புணர்வோர்
பிறர்செய்நன்றியையறமறந்திட்டோர்
கன்றுணவிடாமற்கறந்துபால்கொள்வோர்
அடைக்கலமென்றவர்க்கிடுக்கண்செய்தோர்
ஈதுமெனச்சொலியீயாதொழிந்தோர்
குரவர்தம்முரையைக்கொள்ளாதொழிந்தோர்
அமரினிலரசைவிட்டகன்றுநின்றோர்
கற்பழிமனைவியைக்கையகலாதார்
புறங்கூறுதலேபொருளெனக்கொள்வார்
நற்றவவேடம்பொற்புறப்பூண்டு
வஞ்சித்தொழுகும்நெஞ்சத்தவர்கள்
அறங்கெடமுயன்றவருளில்நெஞ்சினர்
மறங்கொடுமன்னுயிர்கொன்றுவாழ்ந்தவர்கள்
பிறன்கடைநின்றோர்பிறரைச்சீறினோர்
துறந்தமாதவர்க்குஅருந்துயர்சூழ்ந்தோர்
இரவலருசிதியெறிகதுவெளவினோர்
விரவலர்வெரிநிடைவிழிக்கமீண்டனோர்
தாய்பசியாலழத்தாம்தனியுண்டோர்
பொய்க்கரிகூறினோர்புன்றொழிலாளர்
தேவரைநிந்தனைசெய்தகமகிழ்வோர்
கன்னியையழிக்கக்கருதியதீயோர்
பிறருண்ணுணவிற்பெரிதுமண்ணிட்டோர்
எற்றவர்க்குள்ளதையில்லென்றுரைப்போர்"

ஆகிய இன்னோரன்னோரெல்லாம் தீயொழுக்கமுடையோராவார். இவரைக் கனவிலுங் கூடாதொழிதல்வேண்டும்.

கல்விகேள்விகள் நிறைந்த ஆன்றோருடன்கூடி "இன்னவை செய்யத் தக்கவை, இன்னவை செய்யத்தகாதவை" என்பது தேர்ந்து,

'புன்னெறிப்படாது நன்னெறிப்பட்டு
இளமையு நில்லாயாக்கையு நில்லா
வளவியவான்பெருஞ்செல்வமு நில்லா
புத்தேளுலகம்புதலவரும் தாரார்
மிக்கநல்லறமேவிழுத் துணையாவது
பிறர்க்கின்னாதனபேதுறச்செய்யிற்
றமக்கின்னாதன தாமேவருதல
தப்பாதென்பவற்றை ஒப்பதேர்ந்து
நல்வழிப்படுதல் வேண்டும். சிறக,

இது எல்லாச செல்வத்தானுஞ் சிறப்புற்று வானோர் தலைவனாய் நின்ற இந்திரன், கௌதம பத்தினியாகிய அகலிகையைக்காதலித்தமையால் தனதேக முழுதும் யோனியாமாறு அக் கௌதமராற்சபிக்கப்பட்டானென்றும், பின்னொருஞான்று ஆசாரியர்ப் பிழைத்த பாவத்திற்காத தன்செல்வ மெல்லாம் நீங்கி வறுமையுற்றும் பிரமஹத்தி முதலியதோடத்தாற் பீடிக்கபபெற்று வருந்தினனென்றும் புராணவாயிலால் அறிந்திருக்கின்றோம்; ஒழுக்கத்திற் றவறினார்யாவராயினும் துன்புறுதல் நிச்சயமேயாம்.

தம்முயிரைக் காப்பாற்றி நல்லநிலைமையில் வைக்கவேண்டு மென்ற எண்ணமுடையார் ஒவ்வொருவரும் இவ்வொழுக்கத்தைக் கைப்பற்றவேண்டும். ஒழுக்கத்தினின்றும் தவறினாலன்றித் தன்னுயிர்நில்லாதென்று தோன்றிய விடத்தும் தன்னுயிரை விட்டேனும் ஒழுக்கத்தை நிலைநிறுத்தல் வேண்டும், உயிரினும் சிறந்தது ஒழுக்கமாகையால் இதனை,

"ஒழுக்கம் விழுப்பந் தரலான்ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."—குறள்.

என்பதனால் அறிக,

அரிச்சந்திரன் சகிக்கவொண்ணாத் துயரங்களையெல்லாம் அடைந்தும் தன் சத்தியத்திற் றவறினானில்லை. ஆதலால் அவற்கு ஏற்பட்டுள்ள புகழ் இத்துணை என்பதனை நம்மாற்கூற இயலுமா? இன்றும் அன்னோன் கீர்த்தி நின்று நிலவக்காண்கின்றாமன்றோ? "செயற்கரிய செய்வார் பெரியர்" என்பது பொய்யாமா? உலகத்தை மயக்குதற்பொருட்டுப் பொய்வேடம் பூண்டு பொய்யொழுக்கினராய்த் திரிவோர் பலராவார். "நெஞ்சையொழித்தொரு

வஞ்சகமில்லை." ஆதலான் அவர்மாட்டுள்ள பஞ்சபூதங்களும் அவர்செயலைக் கண்டு நகைக்கின்றன. படங்களில் வரையப்பட்டுள்ள வாழை, மா, பலா முதலிய கனிவர்க்கங்கள் நாவிற்கு இனிமை பயக்கின்றனவா? அவைபோல அவர் பொய் வேடங்களும் பொய் யொழுக்கங்களும் ஒரு பயனையும் அவர்க்குச் செய்யாதிருப்பதன்றி உலகத்தாரை அவர் வஞ்சித்தலாகிய காரணத்தால் அவர்க்குப் பழியையும் பாவத்தையுமே யுண்டுபண்ணுகின்றன. உலகத்தாரால் பழிக்கப்பட்டனவற்றை நீக்கித் தன்மனதிற்கு ஒப்ப நடப்பார்களானால் அவர்களுக்கு வேடம் முதலாயின ஒன்றும் வேண்டியதில்லை. அர்ச்சுனன் செய்த வெளிமயக்கான சிவபூசையினும் பீமன்செய்த மானஸிகபூஜை உயர்ந்ததென்பதனை ஸ்ரீகிருஷ்ணபகவான் உலகத்தார்க்குத் தெரியச்செய்ய வில்லையா?

> "மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
> ஆகுலநீர பிற."—குறள்.

என்றதும் இக்கருத்துப்பற்றியே,

இன்னும் விரிப்பிற் பெருகும். ஆதலால் ஒவ்வொருவரும் தத்தம் மனத்திற் கேற்ப விரோதமில்லாமல நல்லொழுக்கங்களைப்பற்றிவரில் முற்றறிவும் முற்றுந்தொழிலுமுடைய கடவுள் அறிந்து பயன் அளிப்பார். பிறர் அறிந்தென் அறியாதிருந்தென்? சுபம். சுபம்.

ராம. சுப்பையாசெட்டி.
சொக்கலிங்கம் புத்தூர்.

சிவனடியார் பெருமை.

(௩௪௩-ம் பக்கத்தொடர்ச்சி.)

பின்னும்ஹரதத்த சிவாசாரியார் "உலகத்திற்கு ஒருசாரார் ஞானத்தையே அடையவிரும்பி ஞானசாஸ்திரங்களை யோதல், ஓதுவித்தல், கேட்டல், சிந்தித்தல், நிட்டைகூடல் என்று சொல்லப்படுகின்ற ஞானபாகங்களை யவலம்பிக்கின்றனர். மற்றொரு சாரார், நித்திய கருமாதி சிவபூஜை முதலிய கிரியா பாகங்களை யவலம்பிக்கின்றனர். நாமோ அவ்விரண்டையும் எளிதிலடையசிவபக்தர்களது பாதாரவிந்தத்தையே யவலம்பிக்கின்றோம்", என்னுங் கருத்துடைய,

"ஞானவலம்பினஃகேசித்
கேசித்கர்மாவலம்பினஹா
வயந்து சிவபக்தானாம்
பாதபங்கஜாவலம்பினஹா"

என்று கூறியிருக்கின்றனர்.

ஆகவே சிவனடியார்களைக்கண்டவிடத்துத் தன்வசமழிந்து, மெய்விதிர்த்து, நாத்தழுதழுத்து அவர்களைச் சிவமெனவே வழிபடவேண்டுமல்லாது, அவர்களைச்சாதியிற்றாழ்ந்தவர்கள், உயர்ந்தவர்கள், எளியார், வலியார், நோயுற்றார், நோயற்றார் என்னும் வித்தியாசங்கள் பாராட்டிப் புறக்கணிக்கின்ற பேதைமார்கள் பலர் இற்றைநாளிற் காணப்படுகின்றார்கள். இவர் கூற்று, எவ்வாற்றானும் பொருந்தாது என்பதைச் சற்று விளக்குவாம்.

"சங்கநிதி பதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத் தருவரேனும், மங்குவார் அவர்செல்வம்மதிப்போமல்லோம்மாதேவர்க்கேகாந்தரல்லாராகில், அங்கமெலாங்குறைந்தழுகுதொழு நோயராய்ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில் அவர் கண்டீர்யாமவணங்குங்கடவுளாரே." எனவும்;

"ஈசனடிக்கன்பில்லார்போல்எளியாரில்லையெவ்வுயிர்க்கும்
ஈசனடிக்கன்புடையார்போல்வலியாரில்லையெவ்வுயிர்க்கும்
ஈசனடிக்கன்பின்மையினால்எளிதாய்த்திரிந்தவிக்கயவாய்
ஈசனடிக்கன்புடைமையினால்வலிதாயிற்றேஎவ்வுயிர்க்கும்." என்றும்

"எவரேனுந்தாமாகவிலாடத்திட்டதிருநீறும்சாதனமுங்கண்டாலுள்கி, உவராதேயவரவரைக்கண்டபோது உவந்தடிமைத்திறமகிழ்ந்துள்ளுவந்து பேசி, இவர்தேவர் அவர்தேவர்என்றுசொல்லிஇரண்டாட்டாதொழிந்தீசன்றிறமேபேணிக், கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்நடுதறியைக்காணலாமே."

என்றுங்கூறியுள்ள தமிழ்மறைகளாலும் தெளியக்கிடக்கின்றது.

தொண்டரியல்பைத்திருஞானசம்பந்த ஸ்வாமிகளும் திருமணப்பதிகத் துணர்த்தியது.

"கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில
செல்லூர்ப்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயகம்பானே,"

என்னும் பாசுரத்தன் திருநல்லூரில் பெருமணமென்னு மாலயத்து எழுந்தருளிய 'நம்பன்'என்னும் திருநாமத்தையுடைய சிவபெருமானே! அடியேனுக்கு அமமி மிதித்தல் முதலிய நல்லூர்ந்து செய்யும் பெரியவிவாகம வேண்டாம். பலபெரியோர்களால் மிகமேன்மையாகக்கொண்டாடிய்து மல நீக்கமே. இவை செய்யுட்களையுடைய நூல்களையாராய்ந்து பார்த்தும் ஸ்வானுபவ ஞானமில்லாவிடத்து வெளிப்படுவனவல்ல ஆதலின், திருப்பெருகு சிவஞானத்தையுடைய சிவபக்தி சிரேஷ்டர்கள் பெருமணசசொல்லாராய் தலைமேற்கொள்ளார்கள். இதற்கு மேற்கோள் ஸ்ரீமாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "கல்வியென்னும் 'பல்கடறபிழைத்தும்," "கற்றுரையான் வேண்டேன்கற்பனவும்இனியமையும், என்னும் மகாவாக்கியங்களாம் ஆகவே இத்துணை நேரங்கூறிப்போந்த விஷயங்களினுலே சிவஅடியார்களுடைய பெருமைதெற்றெனப் புலப்படுகின்றது. பெறுதற்கரிய மானிட யாக்கையைப்பெற்ற நாம் செய்பாலனவாகிய முதற்கருமம் சிவபெருமானது திருவடிகளை யடைவதற்குரிய திருத்தொண்டுகளே என்பது போதரும்.

சுபம்,

டி. எஸ். தியாகராஜ ஞானியார்,
கமலாலினிப் பத்திராதிபர், திருவாரூர்.

தர்மா தர்ம சம்வாதம்.

தர்மன்:—அன்பார்ந்த நண்ப!வரல் வேண்டும். நமஸ்கரிக்கின்றேன்

லோபன்:—நானும் நமஸ்கரிக்கினேறேன்.

தர்மன்:—நாம் இங்கே இன்று வந்தது எற்றுக்கு.

லோபன்:—தர்மா தர்மசம்வாதம் செய்து சபையோரை மகிழ்விப்பதற்கு.

தர்மன்:—சிறுவர்களாகிய நம்மால் ஈண்டு நிறைந்திருக்கும பெரியோர்களை மகிழ்வுறச் செய்ய இயலுமா?

லோபன்:—நாம் இளங்குழவிகளாயிருந்து,பொருள் நிறைவில்லாத குதலைச்சொற்களை வசனிக்குங்காலத்து அச்சொற்களையும் பொருள் நிறைவுள்ளனவாகக்கொண்டு மகிழ்வுற்றுர் பலரன்றே! அதுபோலவே இச்சபையார் எல்லோருமநமது புன்சொற்களையும் இன்சொற்களாகக்கொண்டு மகிழ்வார். இங்ஙனமாயின் என் இயலாது.

தர்மன்:—நண்ப! நன்கு சொல்லினை. தெய்வவணக்கம் புரிவோம்.

லோபன்:—மிரம்ப நன்று. அங்ஙனமே யாகுக.

தர்மன்:—நித்தமுற்றுப்புதறிதரும் அத்திமுக வித்தகனைச் சித்தமிசை வைத்தனனுன் னேர்ந்து.

லோபன்:—ஆனைமுகத் தானை அரனார் திருமகனை ஞானமிகுத் தானைமிக நாடு.

தர்மன்:—இதுகாறும் நீயாண்டுச் சென்றிருந்தனை?

லோபன்:—பொருள்தேடச் சென்றிருந்தனன்.

தர்மன்:—அப்படியா? "கல்லானே யானாலுங் கைப்பொரு ளொன்றுண் டாயி, னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்." என்றதனாலும் அருளிலார்க்கவ்வுலகமில்லை பொருளிலார்க், கிவ்வுலகமில்லாகியாங்கு" என்றதனாலும், "எல்லாம பொருளிற் பிறந்துவிடும்" என்றதனாலும், புருடனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் பொருள்தேடவேண்டியது ஆவசியகமே. அங்ஙனம் நீ செய்ததைப்பற்றி மிக மகிழ்வுறுகின்றேன். நீ சம்பாதித்து வந்த திரவியத்தின் றொகை எவ்வளவு?

லோபன்:—இரண்டு லக்ஷம் ரூபா.

தர்மன்:—தோழ! தன்னுடன் நட்டோர் துன்புறுங்காலத்துத் தானும் துன்புறுதலும், அன்னோர் இன்புறுங்காலத்துத் தானும் இன்புறுதலுமே நட்பினர்களுக்கு இலக்கணமாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால், இந்த நல்ல சமாசாரங் கேள்விப்பட்டதுமுதல் நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். மேலும் இச்செல்வம் பூர்வஜந்ம புண்ணியவசத்தினாலேயே உனக்குக் கிடைத்திருக்கின்றதென்று நினைக்கிறேன்.

லோபன்:—அடடா! என்ன சொல்லினை? பூர்வஜந்ம புண்ணியவசத்தினாலேயா எனக்குக் கிடைத்தது? இல்லை. பாடுபட்டுச் சம்பாதித்ததினாலேயே கிடைத்தது.

தர்மன்:—நீ பாடுபட்டேனென்று சொல்வது மெய்யே. ஆயினும் பாடுபட்டும் பயனில்லாமற் செல்வார் பலரையும் நாம் கண்கூடாகப் பார்க்கவில்லையா? இதுபற்றியே "வருந்தியழைத்தாலும் வாராத வாரா பொருந்துவன போமினென்றாற்போகா" என்று பணித்தார் பெரியாரும்.

லோபன்:—நண்ப புண்ணியம் ஆம் பாவமபோம் போனநாட் செய்த அவை, மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள். என்றுநானும் வாசித்திருக்கின்றேன். அது எனக்கு இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. நீ கூறியது உண்மையே,

தர்மன்:—இது நிற்க இப்பொருளை யென்ன செய்யப்போகிறாய்?

லோபன்:—ஒரு பெட்டியில்வைத்துப் பத்திரமாய்ப்பூட்டிவைக்கப் போகிறேன்.

தர்மன்:—உன் செலவிற்குக்கூட எடுத்துச் செலவு செய்யாயோ?

லோபன்:—ஆம்! ஆம்!! அதற்கென்ன சந்தேகம் எனக்கென்ன செலவு இருக்கின்றது. ஏதேனும் கொஞ்சம் கூழ்கிடைத்தாற் குடித்துவிட்டுத் திரிகின்றேன்.

தர்மன்:—நன்று சொல்லினை. உனக்குப்பொருள் தேடிவைக்கத்தான் விதியிருந்ததேயன்றி; அதனை நான் அனுபவிப்பதற்கு விதியில்லாமையைக் குறித்து மிகக் கவலையுறுகின்றேன்.

லோபன்:—தான் தேடாப்பொன்னுக்கு மாற்றுமில்லை, உரையுமில்லை யென்ற பழமொழி மெய்யாயிற்று. உன்னைப்போல எல்லாருக்குங் கொடுத்து என்பொருளை யெல்லாம் நான் இழக்க வேண்டுமென்று உனக்கு எண்ணமிருக்கிறதா?

தர்மன்:—அப்படி ஒருநாளும் இல்லை. தருமத்தின்பொருட்டுக் கொடுத்தவர்க்கு ஒருநாளும் பொருட் குறைவு வராது. ஒரோவழி விதிவசத்தாற் குறைநேரினும் அக்குறையைக் குறையென்று கருதார் அறிஞர். கொடுத்திளைத்த தாதா உயர்வுடையன் என்று நம் நூல்கள் முறையிடுகின்றன. அஃது அங்ஙனமாக உன் பணம் முழுமையையும் கொடுக்கும்படி சொல்லவில்லை. "வருவாயிற் கால்வழங்கி வாழ்தல்" என்றபடி நாலிலொரு பாகத்தையேனும் தருமத்தித் செலவுசெய்.

லோபன்:—பொருள்தேடினவர்கள் அப்பொருளால் இன்பத்தை யனுபவிக்க வேண்டும். ஒரு பிரயோஜனமுமில்லாமல் தன்னிடம் வந்து யாசிப்பவர்களுக்குக் கொடுத்துவிட்டுப்போவதில் என்ன இன்பமிருக்கின்றது? பொருட்கேடு தவிர வேறில்லையே.

தர்மன்:—நீ கூறுவதை அறிஞர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். கொடுப்பதினாலேற்படும் இன்பத்தைக்காட்டிலும், மற்றொன்றில் இன்டமிருப்பதாக என்புத்திக்குத் தோன்றவில்லை.

லோபன்:—உனக்கென்ன பைத்தியம் பிடித்திருக்கிறதா? ஏன் இப்படி நெஞ்சுக்குத் தோன்றியவாறு உளறுகிறாய்?

தர்மன்:--நண்ப! ஏன்இவ்வாறு கூறுகின்றாய்?நான்புத்தி ஸ்வாதீனமுள ளவனாய் நின்றே பேசுகின்றேன். நான் சொல்வது உன் மனதிற்கு விரோதமாயிருந்தால், அதற்கு இவ்வாறு ஏன் என்னை யிகழுகிறாய்? "நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண, மேற் சென்றிடித்தற் பொருட்டு" என்று ஆனறோர் கூறியிருக்கின்றமையால் நீ எவற்றைச் சொல்லினும் உன்னுடன் இதகாரம் சிநேகஞ் செய்ததற்காக உன்னை நல்வழிப்படுத்த வேண்டியது எனது கடமையாம்.

லோபன்:—அப்படியா! நகுதற்பொருட்டன்று நட்டல்மிகுதிக்கண், மேற் சென்றிடித்தற் பொருட்டு என்றனையே அதன்கருத்து என்னே?

தர்மன்:—ஒருவனோடொருவன்சிநேகம் செய்தல் தம்முள் நகுதற்கிறை த்தன சொல்லி நகையாடற் பொருட்டன்று; அவர்க்கு வேண்டாத செய்கையுளதாயவழி முற்பட்டுக் கழறுதற்பொருட்டு எனபதாம்.

லோபன்:—அன்ப! இச்செய்யுள் மிகவும் உயர்வுள்ள பொருளைத் தன் கண் அடக்கி உள்ளது. இதனைத் திருவாய்மலர்ந்தருளினார் யாவர்?

தர்மன்:—திருவள்ளுவனாயனார்.

லோபன்.—இவரைப்பெருநாவலர் என்று கூறுவோரும் உண்டோ?

தர்மன்—ஆமாம் இன்னும் பலபெயர்களும் உள.

லோபன்:—இவர் செய்திருக்கும் நூல்திருக்குறளென்றம் அதுபொது வான தர்மங்களை உலகத்தார்க்கு உபதேசிக்கத்தக்கதான மிகவுயர்வுள்ள நூலென்றும பல வித்துவான்களும் கூறுகின்றனர். அஃது உண்மை தானா?

தர்மன்:—அதற்கென்ன சந்தேகம்?

லோபன்:—அந்நூலில் பிறருக்கு ஈதலினால் இன்பம் உண்டென்று எவ்விடத்தேனும் சொல்லப்பட்டிருக்கின்றதா?

தர்மன்:—அந்நூலிற் சொல்லியிருந்தால் நீ ஒப்புக்கொள்ளுவாயா?

லோபன்:—எவ்வாராலும் அந்நூலிற்சொல்லியவைகளெல்லாம் ஒப்புக்கொள்ளத் தக்கனவாகவே யிருத்தலால் யானும் ஒப்புக்கொள்வதில் ஆட்சேபணையில்லை.

தர்மன்.—இச்சொல் உண்மைதானா? சொல்லவா?

லோபன்:—ஆமாம் உண்மைதான் சொல்லு.

தர்மன்:—அவனமாகிற் சொல்லுகின்றேன். "ஈத்து உவக்கும் இன்பம் அறியார் கொல் தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர்" என்பதே. இதுபோல் இன்னும்பல செய்யுட்கள் உள. அவற்றை விரிப்பிற் காலதாமதமாகுமென்று நினைக்கிறேன்.

லோபன்:—இஃதொன்றே என்மனத்தைச் செம்மைசெய்துவிட்டது. மற்றைசசெயயுட்களையும் விரிப்பிற் காலதாமதமாகுமென்று நீ கூறியதும், உண்மையே. உன்னால் இன்று நான் பொருள் பெற்றதன் பயனை அடைந்தேன். எனக்கு இன்று நீ செய்த நன்றி ஒருநாளும் மறக்கற்பாலதன்று.

தர்மன்:—நன்றுசொல்லினை! உன்புத்திசாலித்தனம் வியக்கத்தக்கதே.

லோபன்:—இதுநிற்க திருக்குறள் முதலிய நீதிநூல்களை எல்லாம் யாண்டுச்சென்று கற்றனை?

தர்மன்:—இப்பொழுது நம்மூரில் ஸ்ரீ மாணிக்கவாசக வித்தியாசாலையென்னும் பெயரினையுடையதோர் வித்தியாசாலை நியமிக்கப்பெற்றுள்ளதென்பது உனக்குத் தெரியுமன்றோ? நான் அதிற்றான் வாசித்தேன்.

லோபன்:—நியமித்து எத்தனை வருஷமாயிற்று.

தர்மன்.—வித்தியாசாலை நியமித்து ஒரு வருஷமாயிற்று.

லோபன்—இன்று என்ன விசேடம்?

தர்மன்:—இன்று வருடோற்சவக் கொண்டாட்டதினம்.

லோபன்:—அப்படியா! நன்று! நன்று! இதுபோற்பல்லாயிரவருடோற்சவங்களைப் பெற்று நீடூழிவாழுமாறு எல்லாம வல்ல இறைவனுடைய எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். அன்றியும் நினக்குச் செய்தகுற்றங்களை மன்னித்தருளியதற்கு வந்தனம் செலுத்துகின்றேன்.

தர்மன்:-நானும் அங்கீகரித்து என் மனதைத்திருப்திசெய்தமைக்கு உனக்கு நானும மனப்பூர்வமாக வந்தனத்தைச் செலுத்துகின்றேன். செல்வோம் வா.

சுபம்! சுபம்!!

வ. யி. சுப்பையா, ப. கி. சேதுராயன்.
சொக்கலிங்கம்புத்தூர்.

மாலினீ மாதவம்.

11-வது அத்தியாயம்.

பத்திரிகைகள்.

(News Papers.)

(347-ம் பக்கத்தொடர்ச்சி.)

இக்கொடுங்கதையின் விருத்தாந்தங்களை அக்காலத்துப் பத்திரிகைகள் ஸவிஸ்தாரமாய்த் தம்தம் முறை (Policy)யை யனுஸரித்துப் ப்ரஸ்தாபித்திருக்கின்றன. அவைகளிற் கூறப்பட்டுள்ளதை ஸங்க்ஷேபமாய் நாமும் இவ்வத்தியாயத்திற் கூறுவோம்.

தந்தி ஸமாசாரங்கள்.

நமது சொந்த நிருபரிடமிருந்து

மணிபுரம் கொலை.

நேற்றுமாலை சுமார் 4-மணிக்கு, மதுரை ஜில்லா மணிபுரம் ஜமீன்தாரியில், வஸந்த விலாஸம் பங்களாவைச்சார்ந்த சிங்காரத்தோட்டத்தில் பட்டப்பகலில் ஓர் கொடுங்கொலை நடந்ததாம்.

அடுத்த தந்தி.

கொலை செய்யப்பட்டவர், திருநெல்வேலி ஜில்லா பாலூர் ஜமீன்தார் புதல்வன் தினகரனும். கொலைசெய்தவர், அன்னவரால் அபிமானத்துடன் வளர்க்கப்பட்டுவந்த மாதவன் என்றவனும்.

அடுத்த தந்தி.

கொலைக்குக்காரணம்—இறந்தவரின் ஸகோதரி மாலினியும், மாதவனும் பரஸ்பரம் காதலித்ததும், இறந்தவரும், அவர் பிதாவும் அதற்குச்சம்மதியாது, மணிபுரம் மஹாராஜாவுக்கு அவளை விவாகம்செய்விப்பதாய் நிச்சயித்ததும் என்று சொல்லப்படுகிறது.

அடுத்த தந்தி.

செய்கை நேரத்துக்குச் சற்றுமுன், மாலினியும் மாதவனும் ஏகாந்தமாயிருந்ததைத் தினகரன் பார்க்க நேர்ந்ததாகவும், அப்

பொழுது நேர்ந்த கொடுங்கோபத்தாற் கைகலந்து விட்டதாகவும்—அதன் முடிவு இக்கொலையென்றும் தெரியவருகின்றது. மற்றவிவரங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அடுத்த தந்தி.

மணிபுரம் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஹரிராவ் உடனே அரண்மனை சென்று சில ப்ரதம விசாரணைகள் செய்து, மாதவனைக் கைதிசெய்து இருக்கின்றாராம். நகரம் முழுமையும் துக்கத்தில் மூழ்கியிருக்கின்றதாம்.

ஒரு பத்திரிகையின் அபிப்பிராயம்.

மற்றோரிடத்தில மதுரைஜில்லா மணிபுரம் கொலைக்கேஸைப்பற்றிய தந்தி ஸமாசாரங்களை விவரித்திருக்கின்றோம். அந்த ஜில்லாவிற் சென்ற இரண்டு மாஸத்துக்குள் இரண்டு கொடுங்கொலைகளும், ஒரு பெருங்கலகமும் நேர்ந்த விஷயம் மிகவும் விஸனிக்கத்தக்கதே! "அந்த ஜில்லாவில் போலீஸ் பரிசீலனை அவ்வளவாகத் திருப்திகரமில்லை" யென்று சென்ற வருஷ 'போலீஸ் பரிசீலனை அறிக்கை (Administration Report) யில் நமது சென்னை கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டிருக்கும் விஷயத்தை முன்னமேயே இப்பத்திரிகையின் மூலமாய் நமது நண்பர்களுக்குத் தெரிவித்திருக்கின்றோம்..............இநத சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயமும் நாம் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். "உயர்ந்த" சம்பளங்கள் கொடுத்தால் தான் தக்க மனிதர்கள் யாதொரு விதமான கலகங்களுக்குமுட்படக் கூடாதவர்களாய் (above corruption and suspicion) இவ்வுத்தியோகத்துக்கு வருவார்களென்று போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் அபிப்பிராயப்பட்டிருப்பதும் நமது நண்பர்கள் அறிவார்கள்.

இன்னொரு பத்திரிகை.

ஆனால், மதுரை ஜில்லா அனுபவிக்க நேர்ந்த இந்தக்கொடும் ஸமயத்தில், இங்கிலாந்தில், 'ஸ்காட்லாந்து யார்ட்' என்ற போலீஸ் பலத்தைச்சேர்ந்து மிகக ப்ரக்யாதி பெற்ற 'எல்லிஸ்' துரையவர்கள் அநத ஜில்லாவுக்கு போலீஸ் ஸூபரிண்டெண்டாக வாய்த்தது மதுரைஜில்லாசெய்தபெரும்பாக்யமே.

..................அன்னவர் தன் ஸாமர்த்தியத்தாலும் புத்தித் திறமையாலும் இககொடும்ஸம்பவங்களின காரணங்களை யாராய்ச்சி செய்து குற்றவாளிகளைச் சரியான தண்டனைக்குட்படுத்தச்செய்வது டன, இனிமேல் அவர் பரிசீலனையில் இப்படிப்பட்ட குற்றங்கள் மறுபடி ஸம்பவிக்காது காத்து, மதுரை ஜில்லாவின் நற்பெயரை மறுபடி நாட்டுவார் என்பதை நாம் நிச்சயமாய் எதிர்பார்க்கின் றோம்.

அடுத்த நாள் தந்தி.

மதுரை ஜில்லா ஸூபரின்டெண்டு எல்லிஸ் துரையவர்கள் இன்று காலை மணிபுரம் சென்று ஸ்தல விசாரணைகள் பலவாறு செய்து மறுபடி மதுரைக்கு வந்துவிட்டாராம்.

அடுத்த நாள் தந்தி.

இன்று பாரிஸ்டர் மிஸ்டர் கோமன்துரையவர்கள மணிபுரம இரண்டாவது வகுப்பு மேஜிஸ்ட்ரேட் முன், கைதி (மாதவன்)யை ஜாமீனில் விடும்படி, விண்ணப்பம் செய்தாராம்..........உபயதரப்பிலும் அநேகவிதமான ஆக்ஷேபணை ஸமாதானங்களானபிறகு, கடைசியாக,மணிபுரம் ஜமீன்தாரின் நபர் ஜாமீன் பேரிலும் 30,000 ரூபா ரொக்க ஜாமீன் பேரிலும், கைதியை விட்டிருக்கின்றாராம். மாதவன் மணிபுரம் ஜமீன்தாரின் உத்தரவுநிக்குட்பட்டு, அவர் அரண்மனையிலேயே இருக்கவேண்டும என்ற ஒப்பந்தத்தின் பேரில் அவ்விதஉத்தரவு செய்யப்பட்டதாம்.

அடுத்த தந்தி.

மாதவன் மணிபுரம் ஜமீன்தார் அரண்மனையில் வஸித்துவருகின்றான். அரண்மனைகருத்தக்காவல் வைக்கப்பட்டிருக்கிறது. அரண்மனைக்குள் மாதவன் ஸ்வேச்சையாய்த்தான் இருக்கின்றானாம். தேவையான புஸ்தகங்கள் பத்திரிகைகள் முதலானவைகள் உபயோகிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

பத்திரிகையின் அபிப்பிராயம்.

இந்த ஸந்தர்ப்பததில் நமது மணிபுரம் ஜமீன்தாரின் பெருந் தன்மையையும், தயையையும் பற்றி விசேஷித்துப் புகழ்வது ஸமயோசிதமென்றே நாம் எண்ணுகின்றோம்.

தெய்வபக்தி ராஜபக்தி ஜனங்களிடத்தன்பு முதலான உத்தம குணங்களிற் சிறந்த, ஓர் பூர்வ வம்சத்தில் உதித்தவர் இப்புண்ய வான். இவர் நற்குணங்களை யறிந்தே இவருக்கு, இவ்வளவு சீக்கி ரத்தில் நமது ராஜாங்கத்தார் திவான் பகதூர் பட்டமளித்திருக்கி ன்றாகள்.

மாலினீயின் விவாஹ விஷயத்தில தனக்கு எதிரியாய் (Rival) மாதவன் தோந்தவனாயினும் அதைப் பொருட்டாய்ப் பாரா ட்டாமல், தருமமே உருவெடுத்தாற்போல் விளங்கும் நமது ஜமீன் தாரவர்கள் ஜாமீன்தாராக நின்றது, மிகவும் ஆச்சரியிக்கத்தக்கதே!

* * *

இவர் அநேக நண்பர்களின வேண்டுகோளுக்குடன்பட்டு, நமது சென்னை சட்ட நிரூபண ஸபைக்கு அடுத்த தடவையில் மெம்பராக ச்சமமதித்திருக்கின்றாராம்.

இப்படிப்பட்ட உத்தமகுணசாலியானவர் மெம்பராக வருவது நமது சட்ட நிரூபண சபைக்கே ஓர் பெருமை யென்பதை இப்பத் திரிகையை வாசிப்பவர்கள், நாம் சொலலாமலே அறிந்துகொள் வார்கள்"

அடுத்த தந்தி.

"மணிபுரத்தில் எதிர் பாராதது நடந்த இந்தக்கொலைக்கேஸினு லும், அதனுல், பாதூர் மகாராஜாவுக்கு ஏற்பட்ட புத்திர சோகத் தாலும், மாலினீக்கும், மணிபுரம் ஜமீன்தாருக்கும் நிச்சயித்திருந்த விவாஹமானது உத்தேசித்த பிரகாரம் வெள்ளிக்கிழமை நடக்க வில்லை. பின்பு சிறிது காலம் சென்றுதான் ஆலோசிக்கப்படும்" என்று நமது மதுரை நிருபர் தந்தியடித்திருக்கின்றார்.

12-வது அத்தியாயம்.

கள்ளன் கோட்டை.

Kallan Kottai.

மதுரை ஸம்ஸ்தானத்தை யரசாண்டுவந்த நாயக்கர் வம்சமா னது மீனாக்ஷிராணியுடன் 1736-ம் வருஷம் முடிவுபெற்றதும்,

அவனுக்குப்பின், தேசமானது பற்பல கொடுங்கலகங்களுக்கும், கொள்ளைக்கும் பஞ்சத்துக்கு முட்பட்டுக் கடைசியாய், கர்நாட நவாபின வசப்பட்டதும், பிறகு சிறிதுகாலம், ஈஸ்டு இந்தியா கம்பெனியாரின உதவியினுல், நவாபால ஆளப்பட்டுவந்ததும், பிறகு 1781-ம வருஷத்தில் அத்தேசததை நேராக ஆளத்திறமையில்லாததாலும், மைசூர் சுல்தான் ஐதர் ஆலியுடன் செய்ய நேர்ந்த சண்டையின் நிமித்தம் ஏற்பட்ட ஏராளமான கடன்களைத் தீர்க்க வழியில்லாமையாலும், மேலும் தன் ராஜ்யத்தை 'உதவிச்சேனை' (Subsidiary Force) புரிந்து காப்பதன்பொருட்டு அதற்கு நேரிடும் செலவுக்காகவும், மதுரை ஸம்ஸ்தானத்தின் தீர்வை வரும்படி (Revenue)களை வசூலித்துக்கொள்ளும் பாத்யதையானது கம்பெனியார்களுக்குக் கர்நாட நவாப் அளித்ததும, கடைசியாய் 1801-ம் வருஷம் இம்மதுரை ஸம்ஸ்தான முள்படக் கர்நாட ராஜ்யம் முழுமையும இங்கிலீஷ் ராஜாங்கத்தார் வசமானதும், இச்சரித்திரங்கள் விவரமாய்க்கூறுகின்றன. இந்த மத்யகாலத்தில் இத்தேசமானது அனுபவித்த துன்பமும், கொலைகளும், கொள்ளைகளும், கலகங்களும், பஞ்சங்களும், எண்ணிறந்தவை. சரீரமும் சொத்தும் தன்னுடையவை யென்று சிறிது காலமாவது தைரியமாயிருக்க மார்க்கமில்லாமலிருந்தது எவனுவது ஒரு தலைவன் திரளான ஜனங்களைச்சேர்த்துக்கொண்டு, அனுதமானகிராமங்களில் ப்ரவேசித்து,எதிர்ப்பவரை வதைத்துக் கொள்ளையடிப்பதும், ஸதிரீகளை மானபங்கம் செய்வதுமாய்த்திரிவான்.

இத்துஷ்டர் வம்சங்களில் ஒன்று நமது கள்ளன்கோட்டைத் தலைவன் வம்சம். "கள்ளன் கோட்டையான்' என்றால் அப்பிரதேசமுழுமையும் 'கிடுகிடு' என்று நடுக்கமடையும். 'அமுதபிள்ளைவாய்மூடு' அத்தலைவர்களுக்கும் காவற் கூலி, துப்புக்கூலி கொடுக்காத ஜமீன்தாராவது ப்ரபுவாவது கிடையாது. நாஞ்ச நாடு முதல் கம்பம்,கூடலூர், பழனி வரை யவர்கள் அதிகாரஞ் சென்றுவந்தது.

18-ம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த பாஞ்சாலங்குறிச்சிக் கலகத்தில் கட்டப்பொம்ம நாயக்கன், ஊமையன் முதலான கலகக்காரர்களைப் பிடித்த விஷயத்தில் ஆங்கிலேயருக்கு அக்காலத்தலை

வன் பேருதவி செய்ததின் நிமித்தம் கள்ளன்கோட்டையும் அதைச் சார்ந்த சொல்ப ப்ரதேசமும, அவ்வம்சத்துக்கு சாசுவதமாய், கௌல் செய்துகொடுக்கப்பட்டது.

நமது சரித்திர காலத்தில் அவ்வம்சத்திற் பிறந்த 'திம்மன்' 'பொம்மன்' என்ற இரண்டு சகோதரர்களுமே, அக்கள்ளன் கோட்டைத்தலைவர்கள்.

இவர்கள் தங்கள் தகப்பன் பாட்டன் மாரைப்போல யோக்யமாயிருந்து காலங்கழிக்காமல், அதற்கு முந்தின பூர்வீகர்களைப்போல ஆட்கள் திரட்டிக்கொள்ளையடிப்பதும், கலகம் முதலானவை செய்வதும், இன்னும் பலவிதமான துர்ச்செய்கைகளால் அப்பிரதேசத்துக்கே ஓர் பயங்கரமாயிருந்துவருகின்றனர்.

ஸர்க்காரில் எவ்வளவோ முயற்சித்தும், இத்துஷ்டர்கள் சட்டத்துக்குட்பட்டு (Clutches of Law)த் தண்டனையடையாது தப்பித்துவருகின்றனர்.

இத்தலைவர்களைப்பற்றி முன் அத்தியாயங்களிலும் சொல்லியிருக்கின்றோம். இவர்களுக்கு இன்னும் விவாஹமாகவில்லை. இவர்கள் நினைத்தமாத்திரத்தில், 2,0000 ஜனங்கள் தடியும் கையுமாய் யுத்தசன்னத்தராய் வந்து விடுவார்கள். அவ்வளவு ப்ரபல துஷ்டர்கள். ஒருவரும் நிகரில்லை. நமது சரித்திர தினத்தின் மாலை சுமார் 3 மணி நேரமிருக்கலாம். நமது தலைவர்கள் கள்ளன்கோட்டையில் ஓர் ஆலமரத்தடியிலுட்கார்ந்து ஸம்பாஷித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

பொம்மன். " அண்ணே! அன்னிக்கு அடிச்ச பன்னி முறட்டுப்பன்னியப்பா கறி நல்லாகொழுத்த—

திம்மன். தம்பி! அது கிடக்கட்டும்! இப்படி இருந்தூட்டா—நாமென்ன உயிரோடிருக்கிறது நிச்சயமா? இப்படியே மண்டையைப்போட்டால் இந்தக்கோட்டை கொத்தளங்களை ஸர்க்காரில் பிடிங்கிக்கிடுவாங்களே. அண்டைக்கே ஒரு துறை பார்த்துவிட்டுப் போனுங்க. வெயிலுக்காலத்தில் இங்கே குளிர்ச்சியாயிருக்குந்தாம். துரைமார் இருக்கச்சவுக்கியமாம். நாம்பன் இவன்களுக்கு வேட்

ண்டபரீட வேண்டிய உதவி செய்கிறது இவன்க நமக்கே குண்டு வைககப்பார்க்கிறது. நம்ம மண்டையைப் போட வேண்டியது தான். " உடனே ஸர்க்காரில் எல்லாத்தையும் பிடிங்கிக்கிடுவாங்க!

பொம்மன். அதற்காகத்தான் சொன்னேன். அண்ணே! எப்படியாவது ஒருகுட்டியைப்பிடித்துக் கட்டிக்கிட்டா, நம்ம கருப்பன் செயலாலே ஒரு குஞ்சுகிஞ்சு பிறந்திடிச்சானல், ஏதோ நம்ம பேரையும் நம்ம பெரியவக பேரையும் சொல்லிக்கிட்டுத் திரியுமே! நீ ஒண்டுக்கும் உடன்படமாட்டேன் என்குதையே!

திம்மன். தம்பி! எனக்கோ வயதாச்சுது நீதானே செய்துகிடேன். உனக்கு நல்ல குட்டியாய்ப் பாத்து வைத்துருக்கேன்!

பொம்மன். அண்ணே! நீ சொல்லுது எனக்குத்தெரிஞ்சிச்சு. அந்த மணிபுரத்தான் குட்டி தானே அண்டைக்கு'—

திம்மன். இப்போத்தான் தன்ன! இங்போ நீ உறுதியாய்ச் சொன்ன இண்டை இரவுக்கே கொண்டாந்துடலாம்—சொல்லு பார்ப்போம.

பொம்மன். அண்ணே! மணிபுரம் சமீன்தாருக்கல்லோ அந்தக்குட்டியைப் பரிசம் பேசியிருக்குதாம் —நல்லா குட்டியண்ணே!—நல்லா தனுக்கு நம்லாமினுக்கு.

திம்மன். இந்த இழவு விசாரமுனக்கென்னத்துக்கு சம்மதமானச்சொல்லு இண்டை இரவுக்கே—

பொம்மன். அண்ணே! எப்படியாவது கிடத்திக்கிட்டு வந்தாட்டோமானல், நீயாவது, நானவது, யாராவது ஒருவர்—ஆனல், இழவு சனுக்காரானுக்குப் பயந்தல்லோ முடியல்லே. அண்டைக்கு அந்த இனுசுபேட்டர் எசமானே ஒரே நிமித்தா நிமித்திடலாமென்டுபார்தேதேன் நீயல்லோ, கெடுத்துட்டே!

திம்மன். அடே பயித்தாரா! அப்படியெல்லாம் செய்யக்கூடாதடா! இதென்ன கர்நாட ராச்சியமா? கும்பினியான் ராச்சியமில்லே! ஒரு பீரங்கி போட்டால்—சரி—சொல்லு உறுதியாய்.

பொம்மன். மணிபுரம் சமீன்தாரு, பிறுது போட்டா!

திம்மன். இந்த இழவு விசாரமெல்லாம் உனக்கென்னத்துக்கு. நானல்லோ பாத்துக்கிடுதேன். அவன் குடுமி நம்மா கிட்ட அகப்பட்டு முழிக்கிதல்லோ நம்ம மீறி ஒரு காரியஞ்செய்திருவான்? நெஞ்சழுத்தம் அவனுக்கு!—ஆ! அன்னைக்கு அந்தக்குட்டிக்கிட்டத்திருனேமே என்ன மிறட்டிட்டுட்டான்.

சம்பாஷணை முடிவில், அன்றிரவே மாலினீயின் அந்தப் புரத்தில் பிரவேசித்து, அவளைக் கிடத்திக் கள்ளன் கோட்டைக்குக் கொண்டுவந்து விடுகிறதென்று சகோதரிருவரும் தீர்மானித்தார்கள்.

(இன்னும் வரும்)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

முத்திரா ராக்ஷஸம்.

[352-ம் பக்கத் தொடர்ச்சி.]

சாணக்யன்:—வத்ஸ! எவ்வளவு சிரமப்பட்டு எழுதினாலும் ப்ராஹ்மணன எழுத்து அவ்வளவாகத் தெளிவாய் இருப்பதில்லை ஆகலால், நாம் சொன்னதாக ஸித்தார்த்தகனிடம் சொல். யாரோ யாருக்கோ தானே வாசித்துக்கொள்ளும்படி (எழுதப்படுகிறது) என்று சொல்லி, மேல்விலாஸமன்னியில், இந்த ஸமாசாரங்களுடன் சகடதாஸனைக்கொண்டு ஓர் கடிதம் எழுதச் செய்து, நம்மிடம் வந்து சேரும்படி சொல். சாணக்யன் எழுதச் சொன்னதாக அவனிடம் சொல்லவேண்டாம்.

சிஷ்யன்:—'அப்படியே செய்கிறேன்'

(போகின்றான்.)

சாணக்யன்:—(தனக்குள்) அப்பா! மலயகேதுவை ஒருவனை ஜயித்து விட்டோம்.

ப்ரவேசம்:—ஸித்தார்த்தகன். கடிதத்துடன்.

ஸித்தார்த்தகன்—ஆர்ய! ஜய, ஜய;

ஆர்ய! சகடதாஸனால் எழுதப்பட்ட கடிதம் இதோ கொண்டு வந்திருக்கின்றேன்.

சாணக்யன்:—(வாங்கிப்பார்த்து) ஆஹா! எழுத்துக்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! (வாசித்துவிட்டு) நல்லது! இந்த முத்திரையால் அதற்கு முத்திரை யிடு!

ஸித்தார்த்தகன்:—(அப்படியே செய்து) ஆர்ய! இந்தக் கடிதத்திற்கு முத்திரை போட்டாய்விட்டது இனிமேல் என்ன செய்ய வேண்டியது!

சாணக்யன்:—அப்பா! நம்பிக்கையான மனிதர்களைக் கொண்டு செய்யவேண்டிய ஓர் முக்கியமான கார்யத்தில் உன்னை நியமிப்பதாக எனது இச்சை.

ஸித்தார்த்தகன்:— (ஸந்தோஷத்துடன்) ஏதோ என்பேரில் தாங்கள் தயவுதான். அடியேன் தேவரீர் விஷயத்தில் என்னசெய்ய வேண்டுமென்பதைத் தேவரீர் ஆக்ஞாபித்தருளவேண்டும்.

சாணக்யன்:—முதலாவது: நீ கொலைக்களம் சென்று, உன் வலக்கண்ணைக் கோபத்துடன் சுருக்கும் அடையாளத்தை யவர்களுக்கு அறிவிக்கவேண்டும். அப்படிச் சுருக்கினவுடன், அவ்வடையாளங்கண்டு, அவர்கள் பயந்தவர்கள்போல் பாவனை செய்து இங்கும் அங்கும் ஓடவேண்டும். அப்பொழுது நீ சகடதாஸனை மீட்டிக் கொண்டு போய் ராக்ஷஸனிடம் சேர்ப்பித்துவிடவேண்டும். அப்பொழுது, தன் நண்பனை மீட்டிவந்த ஸந்தோஷத்தால் ராக்ஷஸன் கொடுக்கும் ஸன்மானங்களையும் நீபெற்றுக்கொள்ளவேண்டும். பிறகு ராக்ஷஸனிடமே கொஞ்ச காலம் நீ வேலைசெய்து வரவேண்டும். அப்பொழுது, பகைவர்கள் நெருங்கினவுடன், நீ இந்த உபகாரம் செய்யவேண்டும். (காதோடு ரகஸ்யம் சொல்லுகிறான்.)

ஸித்தார்த்தகன்:—தேவரீர் உத்தரவுப் பிரகாரம்!

சாணக்யன்:—சார்ங்கரவ! சார்ங்கரவ!

ப்ரவேசம். சிஷ்யன்.

சிஷ்யன்:—குருச்ரேஷ்ட! ஆக்ஞாபிக்க வேண்டும்.

சாணக்யன்:—என் உத்தரவுப்ரகாரம் செய்.

காலபாசன், தண்டபாசன் என்ற இருவர்களிடமும், சந்த்ரகுப்த மஹாராஜாவின்உத்தர்வா யிருக்கிறதாகச்சொல்லி, ராக்ஷஸனுடைய ஏவுதலினால், விஷக்கன்னிகையைக் கொண்டு பர்வதராஜனைக்கொன்ற, ஜீவஸித்தி யென்ற க்ஷமணஸந்நியாஸியை, அவன் குற்றத்தை ஊர்முழுதும் பறைபறைந்து, அவனையும் அவமானப்படுத்திப் பட்டணத்தினின்றும் விரட்டச் செய்யவேண்டும்.

சிஷ்யன்:—உத்தரவுப்படி! (போகிறான்.)

சாணக்யன்:—வத்ஸ! நில், நில்! இன்றொருகார்யம். சகடதாஸன் என்னும் காயஸ்தன், ராக்ஷஸனுடைய போதனையால், நமது சரீரத்திறகுத் தீங்கு விளைவிப்பதிலேயே எப்பொழுதும்முயற்சிகொண்டிருக்கின்றான். அவன் குற்றத்தையும் ப்ரசுரப் படுத்தி, அவனைக்கழுவில் ஏற்றிவிடவேண்டும். அவன் வீட்டிலுள்ள ஜனங்களைச் சிறைச்சாலையி லடைத்துவிடவேண்டும்.

சிஷ்யன்:—உத்தரவுப்படி! (போகிறான்.)

சாணக்யன்:— ஆலோசித்துவிட்டுத் தனக்குள்) இந்தத் துஷ்டன் ராக்ஷஸன் பிடிபட்டுவிடுவானோ?.

ஸித்தார்த்தகன்:— ஆர்ய! பிடித்துக்கொண்டேன்.

சாணக்யன்:—(ஸந்தோஷத்துடன்) தனக்குள் ஆஹா! ராக்ஷஸனையா? (வெளிப்படையாய்) அப்ப! யாரைப்பிடித்துக்கொண்டாய்?

ஸித்தார்த்தகன்:—தேவரீர் சொன்ன விஷயங்களைப் பிடித்துக்கொண்டேன். ஆகையால் அவைகளை முடித்துவரப் போகின்றேன்.

சாணக்யன்:—(முத்திரை மோதிரத்தையும் கடிதத்தையும் கொடுத்து) சரி! போய் வா! நீ போகும் கார்யம் நிறைவேறுக.

ஸித்தார்த்தகன்:—உத்தரவுப்படியே! (போகிறான்.)

(இன்னும் வரும்.)

R. வேங்கடநாராயண சர்மா B. A., B. L.

"நாம் உண்பதேன்"

—:(o):—

ஒரு மாடு நான்கு கால்களையும் நீட்டிக்கொண்டு பார்வைக்குப் பிணம்போற் படுத்திருந்தால் நாம் அதற்கு உயிர் இருக்கிறதா, இல்லையா என்பதை அறிந்துகொள்ளச் சில குறிகள் இருக்கின்றன. காலால் மெதுவாய் அதை உதைத்து அது நகருகிறதாவென்றும், குனிந்து சுவாசம் விடுகிறதாவென்றும், கண்ணை விழித்துக்கொண்டிருக்கிறதாவென்றும், விழியைக் கூட்டுகிறதாவென்றும் இவைபோன்ற பிரகாரியங்கள் அதனிடம் இருக்கின்றனவாவென்றும் ஆராய்கிறோம் இக்குறிகள் தான் அதற்கு ஜீவனிருக்கிறது என்று நீர்ணி நம்மை ஊகிக்கச் செய்வன. இவ்விதக்குறிகளில் யாதொன்றும் புலப்படாவிட்டால் நாம் இன்னும் நுட்பமாகக் கவனித்துப் பார்த்து மூச்சு விடுகிறதா என்று கையை மூக்கில் வைத்துப் பார்க்கிறோம். மனிதனையிருந்தால் நாடியைப் பிடித்துப் பார்க்கிறோம். மாடாயிருந்தாலும் சரி மனிதனாயிருந்தாலுஞ்சரி நாடி பேசாவிட்டால் உயிரில்லையென்று உடனே தீர்மானிக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் ஸதாஸர்வகாலமும் விழித்துக்கொண்டிருந்தாலும், தூங்கிக்கொண்டிருந்தாலும் ஏதாவது வேலை செய்துகொண்டேதானிருக்கிறோம். சும்மாவிருக்கிறோமென்று சொல்லுதல் உண்மையன்று. ஏனெனில் நாம் எதைப்பற்றியாவது யோசித்துக்கொண்டிருக்கலாம். 'மனதைக்கட்டுவது அசாத்தியம். அதைக் கட்டுகிறவன் மஹானாவான். கைகால்கள் அசையக்கூடும். சுவாசம் எப்பொழுதும் விடுகிறோம். இவ் 'வேலைகள்' செய்ய சாதாரணமாக "பலம்" வேண்டுமென்று யாவருக்கும் தெரியும். நோயாளியை நோக்கி நீ ஏனப்பா தள்ளாடித் தள்ளாடி நடக்கிறாயென்று கேட்டால் 'பலம்' இல்லையென்று சொல்லுகிறான். ஆதலால் 'பலம்' தான் வேலைசெய்வதற்குக் காரணமென விளங்குகிறது இப் 'பலம்' எங்கிருந்து உண்டாகிறது? இதன் உற்பத்தி ஸ்தானம் யாது? நாம் எப்பொழுதும் விழித்துக்கொண்டிருந்தாலும் தூங்கினாலும் பகலிலும் இரவிலும் சுத்தமான வாயுவை (முக்கியமாகப் பிராணவாயுவை) உட்கொள்ளுகிறோம். அவ்வாயு நம் சரீரத்திலுள் நாலாபக்கங்களிலும் பரவி, நமது சரீரத்திலுள்ள மாமிசமுதலிய கருவிகளுடன் சேர்ந்து ஓர்வித "எரிச்சல்" எப்பொழுதும் உண்டாக்கிக்கொண்டிருக்கிறது அதற்கு

ஜ்வாலைகிடையாது. அவ்விதமாக எரிந்து கொண்டிருத்தலைத்தான் நாம் 'ஜீவாக்கினி' என்று சொல்லுகிறோம். நமது வைத்தியர்கள் இவ்வக்கினிதான் யாவற்றுக்கும் காரணமென்று சொல்வர்.' இவ்வீர எரிச்சல் தான் 'பலம்' என்பதற்குக் காரணமாம். இவ்வெரிச்சல் குறைந்தால் 'பலம்' என்பது குறையும். 'பலம்' குறைந்தால் வேலைகளில் லோபம் உண்டாகிறது. இவ்வாறு உண்டாவதினின்றும் நாம் இவ்வீர எரிசசல் இன்றியமையாதது எனத்தெரிந்து கொள்ளுகிறோம். இவ்வெரிச்சலும் குறைவின்றி ஒரேநிதானமாயிருத்தல் வேண்டும் ஜாஸ்தி 'பலம்' வேண்டிய காலத்தில் ஜாஸ்தியான எரிச்சலிருத்தல் அவசியம் இல்லாவிடில் பலம் பெறமுடியாது. எல்லாம் நீராவி யந்திரம் போன்றுதான். இவ்வீர எரிச்சல் எப்பொழுதும் இருந்தால் நமது சரீரத்தில 'கழிவு' (Waste) உண்டாகிறது. எப்படி சாதாரண எரிச்சலில் கட்டைகள் செலவழிகின்றனவோ அப்படி நமது சரீரத்தில எரிந்துகொண்டிருக்கும் ஈர எரிச்சலாற் கழிவு உண்டாகிறது. இக்கழிவு சுமார் ஒரு குறித்த அளவுக்கு வந்தவுடனே, இயற்கை யென்று ஒன்று உளதல்லவா? அது பசி, தாகம் என்னும் இரண்டு தடுத்தற்கரிய உணர்ச்சிகளால் நமக்கு அவ்விஷயத்தைத் தெரிவிக்கிறது. உடனே நாம் அதை அறிந்து உணவை உட்கொண்டு பசியைத் தீர்த்துக்கொள்ளுகிறோம். அதாவது நாம் பசியைத் தீர்த்துக்கொள்ள உட்கொள்ளும் உணவு ஜீரணமாகி உடம்போடு ஒத்துக்கழிவைச்சரிப்படுத்துகிறது. எரிச்சலுக்கும் யாதொரு ஹானியும் நேரிடுகிறதில்லை. பலத்துக்குக் குறைவுமில்லை. ஜீவாதார வேலைகளும் யாதொருகலக்கமில்லாமல் நடக்கும். இவைகளே நாம் உணவுஉண்பதற்குக்காரணம். கட்டையின்றிநெருப்பில்லை; நெருப்பின்றிப்பலமில்லை; பலமின்றிஜீவாதாரவேலைகள்நடவா. உணவுதான் கட்டையென்று வைத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரு விஷயம் முக்கியமாகக்கவனிக்கவேண்டும். உணவுதான் கட்டைஎன்றால் உணவு அப்படியே பிராணவாயுவுடன் சேர்ந்து எரிந்து பலத்துக்குக் காரணமாகிறதென்று சற்றேனும் எண்ணலாகாது. ஏனெனில், உணவு அப்படிப் போவதலல. முதலில ஜீரணமாகி ('ஜீரணம்' என்பது இன்னதென்று பின்னால் கவனிப்போம்) சரீரத்தோடு சரீரமாய் இரண்டறக் கலக்கிறது. பிறகுபிராணவாயுவுடனசேர்ந்து எரிச்சல் உண்டாகி

றது. இவ்வித்தியாசம் மனதில் வைக்கவேண்டிய முக்கியகவனிப்பு. அவ்விதமான பசிதாகமென்பதைக் கவனிக்காவிட்டால் 'கழிவு' மேன் மேலும் நடந்து கொண்டிருக்கும் கழிவைச்சரிப்படுத்த உணவுஇல்லை. நாளடைவில் உடம்பு மெலிந்து நோய் உண்டாகும்.

இவ்வெரிசலைத்தான் ஆங்கிலேய ஜீவதத்துவ சாஸ்திரிகள் 'பிராணதாரவிளக்கு' என்று சொல்லுகிறார்கள். இவ்விளக்கில் எண்ணெய் குறைந்து ஜ்வாலை கொஞ்சம் நடுங்கினால் பலம ஏன்பதும், குறைந்து நடுங்கும். இவ்விளக்கு நிறைந்தேயிருக்கவேண்டும். வெளிச்சம் குறையக்கூடாது. அப்பொழுதுபலமும் குறையாது. இவ்விளக்குத்தான் பிராணன் இவ்விளக்கை அணையாது வைக்கவே நாம் உணவை உட்கொள்ளுகிறோம்.

N. சோமசுந்தரையர் B. A, L. T.

Lecturer in Physology Madura College.

நகரத்தார் சீர்திருத்தத்தைப்பற்றிய நல்லபிப்பிராயம்.

——[:0:]——

அன்புடை ஐய!

தாங்கள் அன்புடன் அனுப்பிய 'நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம்', 'சன்மார்க்கம்' என்னும் பத்திரிகைகளைப்பெற்று மிகவும் களிப்புற்றேன். இதிற் பின்னுள்ளது என் முன்னரும் தமிழ்ச்சங்கத்தார முன்னரும படிக்கப்பட்ட அன்றே, கேட்டதனால் விளைந்த பெருமகிழ்ச்சியை அவ்வவைக்கண்ணே தெரிவித்துள்ளேன். இவ்வியாசம் தங்கள் தெளிவான கல்விப் பயிற்சியையும் சமயப் பயிற்சியையும் மிகவும் அருமையாகக் காட்டுகின்றது. முன்னைய பத்திரிகையில் தாங்கள் நகரத்தார்கள் இப்பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று சொன்ன ஹிதவசனத்துக்கு தாங்கள் சான்றாக நிற்கின்றீர்கள். தங்கள் குலத்தில் தங்களைப்போலும் கல்வியிற் சிறந்த மேன்மக்கள் உள்ளதும் உண்மை. நமது சமயம் அதிகமும் நிலைகுலைந்து நிற்கும் இக்காலத்தும் நமது நகரத்தார்கள் அநேகமான பதிபுண்ணியங்களை மேற்கொண்டு செவ்வனே நடத்துவது உவக்கத்தக்கவிஷயம். ஆயினும் தங்கள் வியாசத்தில் குறிப்பாக விளக்கிய விஷயம் கீழே எழுதியதாகத்தெரிந்துகொண்டேன்.

1. தமிழ் மொழி வடமொழி ஆங்கிலக்கலாசாலைகள் நகரங்களில் ஏற்படுத்தல்.
2. வேதாகம பாடசாலைகள் ஏற்படுத்தல்.
3. சைவ சமயாபிவிருத்திக்காக போதனை சூழ்நிலைகள் மகா சபைகள் கூட்டுவித்தல்.
4. வைத்திய சாலைகள் ஏற்படுத்தல்.
5. பாலிகா விவாகம் தடுத்தல் முதலிய சீர்திருத்தம்.
6. கைத்தொழில் முதலிய வியாபாரங்களை மேற்கொள்ளுதல்.
7. இதையெல்லாம் கூட்டிமுடிக்க ஒற்றுமையுடனிருத்தல்.

—எல்லாச்சாதியாரினும் நங்கள் நகரத்தார்கள் மிகவும் ஒற்றுமையுடையவர்களென்பதை அவர்கள் நடத்திவரும் பல தருமங்களே விளக்கி நிற்கும். ஆயினும் வியாபார விஷயத்தில இன்னும் ஒப்புரவு உண்டானதாகத் தெரியவில்லை. நாலுபேர் சேர்ந்து ஒரு வியாபாரத்தை நடத்தத் துணிந்தவர்கள் சில நாளிலெல்லாம் பிரிவதைக்காண்கின்றோம். ஒவ்வொரு வியாபாரமும் தனித்தனி செய்வதினால் பேருதியம் பெறலாமென்பது சிலருடைய துர் அபிப்பிராயம். மேல் நாட்டார்களில், கோடீஸ்வரர்களாயுள்ளவர்களும், கோடிக்கணக்காகச் சம்பாதிப்பவர்களும் ஜாயின்டஸ்டாக்கு கம்பெனி மூலமாகத்தான் தொழில் விருத்தி செய்து பேருதியம் பெறுகிறார்களென்பது நமடகளுக்கு அவ்வளவாக விளங்கவில்லை. முதல் எவ்வளவு அதிகம் சேர்க்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு லாபம் என்பதும நாம் கண்கூடாகக்காணலாம். இவ்விதமாகச் சேர்ந்தாலொழிய, பெருத்த கைத்தொழில் செய்ய இயலா. பண்டைக்காலத்தில் கடல் வியாபாரம் முழுவதும் நம் வணிகர்களிடமே இருந்ததும் தெரியலாமே. அக்காலத்துள்ள மரக்கலங்கள் முதலியவும் அவர்களுடைமையே. இப்பொழுது இவ்வியாபாரமெல்லாம் எவர்களுடையதாயிருக்கிறது. நம்வணிகமக்கள் ரெயில்வே கம்பெனிகளையும் சேர்த்து நடத்த இயலுண்டாவதெப்பொழுதோ? இறைவன் அவர்கள் உள்ளங்களில் புகுந்து இவ்விதமெல்லாம செய்ய அருள்புரிவாராக.

மேல், பாலிகா விவாகத்தையும் முதல் முதல் தடுக்க வேண்டியமுயற்சி செய்யவேண்டுமென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை. இந்த துர்வழக்கம் பிராமணர்களிலும், வைசியர்களில் சிலரிடத்துமே காணப்படுகிறது. அதினால் அச்சாதியர்களிடமே, பால்ய விதவைகள் அதிகமாகக் காணப்படுகின்றார்கள். பிராமணர்களில் போல், நமவணிக மக்கள் பால்ய விவாகம் செய்ய வேண்டுமென்கிற கட்டாயமில்லையே, மற்றைச சாதியார்களிலெல்லாம் இத்துர்வழக்கமில்லையே! ஆகவே இவ்வழக்கத்தை நிறுத்தின் "நம்வணிக மக்கள் மிகவுமேன்மை பெறுவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

வைசியமக்கள் அங்கங்கு கலாசாலைகள் வேதாகம பாடசாலைகள் நடத்தியே வருகின்றார்கள். ஆயின் அவைகளினால் அதிக பிரயோசனமில்லை. எங்கேனும் ஒன்று இரண்டிடத்தில் சர்வகலாசாலைபோலும் மேன்மையுடையதாகிய பெருங்கலாசாலைகளை ஏற்படுத்தவேண்டும். அதில் தகுந்த யோக்கியதை உடையவர்களை தகுந்த சம்பளம் கொடுத்து ஆசிரியர்களாக ஏற்படுத்தவேண்டும். தகுந்த ஆசிரியர்கள் ஏற்படாவிடில் தகுந்த மாணாக்கர்களும் சேரமாட்டார்கள். அவ்விதமாக தகுந்த ஆசிரியர்களும் மாணாக்கர்களுமபழக்கப்படுவதால் நம்கலைகள்மேன்மேலும்விருத்திக்குவரும். இக்கலாசாலைகளில் தேறும் பிள்ளைகளால் பின்னும் நம் நாடு மிகவும் விருத்திக்குவரும். இப்பொழுதுள்ள மதுரைத் தமிழ்ச்சங்க கலாசாலையும்மை ஆதரித்து அதை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியதும் நம்மக்கள் கடைமைகளில் ஒன்றே. இக்கலாசாலைகளில் சைவசமய போதனையும் உண்டாக்கி அவர்கள் தேர்ந்த பின்னர் பல விடங்களில் பிரசங்கிகளாக ஏற்படுத்தி நம் சமயாபிவிருத்தியைக் கோருதலும முக்கியமான கடமை. நாம் கோயில்களைக் கட்டியும புதுப்பித்தும் வருவதன்பயன் அப்பொழுதே நாம் அடைவோம். பல மதங்களின் வலையில் சிக்குண்டு நாத்திகம் பேசி நம்மக்கள் நாசமும் பெறுவார்களானால் இக்கோவில்களினாலென்ன பயன்? எவ்விதமாக நாம இக்கோயில்களை புதுபபிப்பது? கட்டுவது? நம் சகோதரர்களுடைய வுள்ளத்திலுள்ள ஒவ்வொரு கோயில்களையும் புதுப்பித்து அறிவு விளக்கேற்றி வைப்பதும் அரன்பணியாகும். இவ்விதமெல்லாம் நமது பராசருணாநிதியாகிய பரமசிவத்தின் திருவருளை முன்னிட்டு நம் வணிக மக்கள் முயல்வார்களாயின் அவர்கள் தருமம் என்றைக்குமே நிலைபெறுமென்பதில் ஐயமில்லை.

ஜே. எம். நல்லசாமி.
டிஸ்திரிக்டுமுன்சீபு தஞ்சை 25—1—12.

நகரத்தார் சபைகளும் பிரசங்கங்களும்.

அரியக்குடி ஸ்ரீநிவாசக ஞானவிலாசசபை 10—3—12ல் மாலை 4-மணிக்கு வழக்கப்படி நகரத்தார் பொதுமடத்தில் சபைகூடியது. சபையார் விருப்பப்படி வித்துவான் ப்ரும்மஸ்ரீ. கு. கிருஷ்ணமாசாரியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மன்னார்குடி வித்துவான் ஸ்ரீ. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் நீர்மை என்பதையும், ஸ்ரீ. வேதாந்தாசாரியாரவர்கள் சபையின் பெருமையையும், ஸ்ரீ. திருமலாச்சாரியாரவர்கள் முயற்சியையும, கண்டனூர் ஸ்ரீ. தெ அரு. சித. இராமநாதச் செட்டியாரவர்கள் நம்பிக்கையையும

மதுரை ஸ்ரீ. மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் கேள்வியின்பத்தினையும் ஸ்ரீ. ரங்கராமாநுஜாசாரியாரவர்கள் அடக்கத்தையும், மகிபாலன்பட்டி ஸ்ரீ. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் பொறியடக்க முறைமையையும், ஸ்ரீ. சக்கரவர்த்தி சூரிகள் கருணையையும், ஸ்ரீ. முரு. நா. முருகப்பசெட்டியாரவர்கள் ஆசாரத்தையும், ஸ்ரீ. கி லெ. கிருஷ்ணன்செட்டியாரவர்கள் பிறனில் விழையாமையையும், முறையே இனிமையாகப் பிரசங்கித்தார்கள். சபாநாயகரவர்கள் எல்லாவற்றின் சாரங்களையும், விளக்கி முடிவுரை கூறினார்கள். இச்சபை என்றும் நின்று நிலவும்படி திருவருள் கூடுக.

கண்டனூர் தனவைசியசங்கம் —11—3—12. மாலை 4-மணிக்கு ஸ்ரீமாந். தெ. அரு. சித. அவர்கள் பங்களாவில் கூடியது. இவ்வூர் தனவைசியர்கள் சுமார் 250பேர் வந்திருந்தனர். பெண்பாலார் பலர் ஊக்கத்துடன் போந்திருந்தனர். சபையார் விருப்பப்படி மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். யந்திரமூலம் இன்னிசையுடன் தமிழ்வேத பாராயணம் நடைபெற்றது. முதலில் அக்கிராசனாதிபதியவர்கள் பெரியாரைத் துணைக்கோடல் என்னும் விஷயத்தைப்பற்றி முக்கால்மணிநேரம் உபந்யசித்தார்கள். அரியக்குடி வித்துவான் ஸ்ரீ. தூ கிருஷ்ணமாசாரியாரவர்கள் சிற்றினஞ் சேராமையைப்பற்றியும், ஸ்ரீ. தெ. அரு சித. இராமநாதன் செட்டியாரவர்கள் அன்பைப்பற்றியும், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ மு கதிரேசச்செட்டியாரவர்கள் கல்வியைப்பற்றியும், புதுவயல் வித்துவான் ஸ்ரீ. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் பக்தியைப்பற்றியும், நன்கு உபந்யசித்தார்கள். பின்னர் ஸ்ரீ. அண்ணாமலைச்செட்டியாரவர்கள் கடவுளின் தன்மையென்பதையும், புதுவயல் இராமநாதச்செட்டியாரவர்கள் இன்சொல் நலத்தையும், பிரசங்கித்தனர். இடையிடையே தமிழ்வேத பாராயணம் நடந்தது. முடிவில் சபாநாயகரவர்கள் முற்குறித்த உபந்யாசங்களிலுள்ள நலங்களை விளக்கிக் காட்டி முடித்தார்கள். தெ. அரு. சித. ராம. அவர்கள் சபைக்கும் சபாநாயகரவர்கட்கும் வந்தனம் கூறினர். இவ்வாறு இரவு 10மணி வரை மிக்க குதூகலத்துடன் நிறைவேறியது. அங்குவந்திருந்த புதுவயல் தனவைசியமணிகள் பலர் மிக்க விருப்பத்துடன் மறுதினம் தங்கள் நகரில் சபைகூடி உபந்யாசம் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அவ்வாறே செய்வதாகத் தீர்மானிக்கலாயிற்று.

புதுவயல் தனவைசியசங்கம்:—இந்நகரில் 13-3-12 மாலை 4மணிக்கு ஸ்ரீமாந். எ. பெரி. வீரப்பசெட்டியாரவர்கள் பங்களாவில் சபை கூடியது. நகரத்தாராகிய வணிகமணிகள் பலரும் உள்ளன்புடன்கூடினர். பெண்களும் பலர் வந்திருந்தனர். சபையோர் விருப்பப்படி மதுரை வித்தியாபாநுப்பத்திராதிபர் மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்கள் அக்கிராசனத்

தமர்ந்தீ விருந்து என்பதைப்பற்றி இனிது உபந்யசித்தார்கள். பின்னர் முறையே வித்துவான் ஸ்ரீ. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் சரணாகதியைப்பற்றியும், அரியக்குடி வித்துவான் ஸ்ரீ. சு கிருஷ்ணமாசாரியாரவர்கள் பொறுமையைப்பற்றியும், கண்டனூர் ஸ்ரீ. தெ. அரு. சித. இராமநாதன்செட்டியாரவர்கள் ஈகையைப்பற்றியும், மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீ. மு. கதிரேசச்செட்டியாரவர்கள் கருணையைப்பற்றியும் மிகவும் நன்கு உபந்யசித்தார்கள். சாககோட்டை வித்யாசாலை ஸ்ரீ. கிருஷ்ண சாஸ்திரிகள் மேலே குறித்த உபந்யாசங்களைச் சிறப்பித்துப்பேசினார்கள். பின்னர் மாணவகர்களாகிய அ. சு. பழ. வீர. இராமசாமிசெட்டியார் கல்வியைப்பற்றியும், கண்டனூர் நா. அரு. காசிசசெட்டியார் அழுக்காறாமையைப்பற்றியும், அ. ப. சி. வீர. சின்னையசெட்டியார் இவலறததைப்பற்றியும், ஏ. பெரி. வீர. வீரப்பசெட்டியார் பெற்றோர்ப் பேணலைப்பற்றியும், சி. பழ. வீர. இலக்குமணசசெட்டியார் புலான் மறுத்தலைப்பற்றியும் வழுவற்ற மழலைச்சொற்களால் பேசியதனாலுண்டான இனிமை சபையை உருகச்செய்தது. இவ்வாறு உள்ளக கிளர்ச்சியுடன் இரவு 10-மணிவரை நடந்தது. இவ்வூர் உபாத்தியாயர்கள் ஸ்ரீமத்-கிருஷ்ணையரவர்கள், ஸ்ரீமத்-ஸ்ரீநிவாஸயயங்காரவர்கள் இவ்விருவர் திறமையும் மிகவும் கொண்டாடற் பாலது. அக்கிராசனாதிபதியவர்கள் ஒவ்வொருபந்யாசங்களையும் செவ்விது விளக்கினார்கள்.

மேற்குறித்த நகரங்களில் செந்தமிழ்க் கலாசாலைகளும், சபைகளும் நிலைபெற்று நிலவும்படிக்கான மூலதனந தொகுத்தற்கு முயற்சி நடைபெறுகின்றது எல்லாம் வல்ல இறைவன் திருவருள் முன்னிற்க.

கண்டனூர்வாசி.

ஸர் ஐஸக் நியூடன்.

(355-ம் பக்கத்தொடர்ச்சி.)

1707ம் வருஷம் இவர் இதுவரையிலும் வித்தியாசாலையில் செய்த பிரசங்கங்களை (Algebra) வில் ரஹஸ்யமாய் சேர்த்து (William Whiston) என்பவர் புதியபுஸ்தகத்தைப் பதிப்பித்தார். 1696ம் வருஷம் Bernoulli என்று சொல்லபபடும் பிரான்சு கணித சாஸ்திரி ஐரோப்பியாகண்டத்திலிருந்தும் கணித சாஸ்திரிகளுககு இரண்டு கணக்குகள் கொடுத்து அதைச் செய்ய பந்தயம் போட்டார். அதுவந்த அன்றைக்கே இவர் அவைகளை செய்தனுப்பி, ஐரோப்பாகண்டமுழுவதும் புகழப் பெறறனர். 1699ம் வருஷம பிரான்சு தேசத்து ராஜ்கலாசாலையில் 'மெம்பராக' சேர்க்கப்பட்டார்.

1701ம் வருஷம் நாணயப்பதிப்பு யந்திரசாலையில் தனக்கு உத்தியோகம் கிடைக்கவே உபாத்தியாயர் உத்தியோகத்தை ராஜீநாமா செய்து விஸ்டன் (Whiston) என்பவரைத் தமக்குப்பதிலாக நியமித்தார் அடுத்த வருஷம் Parliment (பார்லிமெண்ட்) சபைக்கு ஸர்வகலாசாலைப் பிரதிநிதியாக மறுபடியும் நியமனமானார். 1705-ம் வருஷம் இவர் ஸர. என்ற பட்டத்தைப்பெற்றார். 1716-ம் வருஷத்தில (Lefnect) லெபனகட் என்பவர் ஆங்கிலேய கணித சாஸ்திரிகளுடைய சாஸ்திர நிபுண தத்துவத்தை சோதிக்கவேண்டுமென்று ஒரு கஷ்டமான கணக்குப்போட அன்றுதினமே அதை முடித்து அனுப்பினார். இவர் மதக்கோட்பாடுகளைப் பற்றியும் கிறிஸ்துவேத வியாக்யானத்தைபபற்றியும் அநேக வியாஸங்கள் எழுதினார். இது தவிர ஐரோப்பாகண்டத்தில் ஆதிமுதல் (Alexndra) அலெக்ஸாண்டர் வரையில் ராஜாங்க வரிசைகளை சீர்திருத்தி ஒரு பெரிய வியாஸம் எழுதினார். அந்தியகாலத்தில் இவர் நீர்பெருக்கத்தாலும் 1725-ம் வருஷத்தில் இருமலினாலும் (Gout) ஆலும் அவஸ்தைப்பட்டார். 1727ஆம் மார்ச்சுமீ 20உ காலை சுமார் 1½மணிக்கு பரலோகஞ் சென்றார் மறுநாள் அவர் (West Minister Abbey) ல் புதைக்கப்பெற்றார்.

S. நாராயணன் B. A. L. T.

புத்தகக்குறிப்பு.

கணன விளக்கம் மூலமும் உரையும்:—இவை புதுக்கோட்டை சம்ஸ்தானத்தைச்சேர்ந்த காரையூரில் வடமொழி தென்மொழிப் புலமையும், உயர்குலமும் நிரம்பிய ஸ்ரீ சாமியையங்காரவர்களால் வடமொழிக் ககோளசாஸ்திரம் பலவற்றையும் ஆராய்ந்து பாயிரம், பரிகைதிப்படலம், உபக்கிரகப்படலம், பஞ்சாங்கப்படலம், பாதசாரப்படலம், கிரஹணவிதிப்படலம், பொதுவிதிப்படலம் என எழுவகையாக 182 செய்யுட்களால் தமிழில் இனிய செஞ்சொற்களை நிரப்பி யாவருக்கும் பொருள் எளிதாக விளங்கும் படிசெய்யப்பெற்றவை. சோதிடங்கற்பவர்க்கு விரைவில் அறிவைத்தந்து தெளியச்செய்யும் சிறப்புற்றவை. இவற்றை அச்சிட்டவர் இந்நூலாசிரியரின் மாணாக்கரும், தமிழ்ப்புலமையுடன் சோதிடசாத்திரப்புலமையும் பெற்றவருமாகிய ஷ காரையூர் ஸ்ரீ சோ. சிந்நயவேள் அவர்களே. நூலாசிரியரிடம

நேரிற்கற்ற இவர்களால் அச்சிடப்பெற்றமையால் ஆசிரியர் கருத்துக்குச் சிறிதும் மாறுபாடின்றிப் பதிப்பிடப் பெற்றிருத்தல் யாவரும் அங்கீகரித்தற் பாற்றும். இலக்கணப்பிழைகட்கிருப்பிடமாகிப் பொருட்சுவையற்றுப் போலிச்சோதிடநூல்கள் பல வெளிவந்துலவும் இக்காலத்து எல்லாச்சுவைகளும் நிரம்பப்பெற்றுப் படிக்குந்தோறும் மனத்தை மகிழ்விக்கும் இனிமையும் தெளிவும் பொருந்திய இந்நூலையும் உரையையும் தமிழகத்தார்க்கு நல் விருந்தாக அச்சிடுதற்குப்பொருளுதவி புரிந்தவர் மேலைச்சிவபுரிச்சன் மார்க்க சபை ஸ்தாபகராகி யுலகப் பிரசித்திபெற்ற உத்தமராகிய ஸ்ரீமாந். வ. பழ. சா. பழநியப்ப செட்டியாரவர்களே. பஞ்சாங்க கணித விஷயங்களையும் மற்றும் சோதிட விஷயங்களையும் அறியவிரும்புவார்க்கு இப்புத்தகம் பெரியதோர் துணையாமென்பது நிச்சயம். நல்ல தளமான காகிதத்தில் 190 பக்கங்களையுடைய சுத்தப்பதிப்பாக உயர்ந்த கலிக்கோ பயின்டுசெய்து பொன்னெழுத்தால் அழகுறச்செய்யப்பெற்றுக்கண்கவரும்படி வெளிவந்த இப்புத்தகம் விலை ரூபாய் ஒன்றுதான். தபால்சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை விவேகபாநு அச்சுயந்திரசாலையிலும், மதுரை புதுமண்டபம் புத்தகவியாபாரம் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

கல்யாணி:—இது "அஞ்ஞாதவாசம்" என்னும் இனியகதையையெழுதி நமது பாநுவில் வெளியிட்டுத் தனிப்புத்தகமாக்கியவரும் மாலினி மாதவி வசந்த மாளிகை முதலான செந்தமிழ் நாவல்களை யெழுதிவருபவருமாகிய மதுரை வக்கில் ஸ்ரீமத் ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பெற்ற சிறந்த தமிழ் நாவலாகும். இதுவும் முன்னமே நமது பாநுவில் வெளிவந்தது. இப்போது தனிப்புத்தக ரூபமாக மதுரை விக்டோரியாபிரஸ் மானேஜர் ஸ்ரீ ஆர். சுந்தரமய்யர் அவர்களால் பதிப்பிடப் பெற்றுள்ளது. இதனைப்படிக்கத்தொடங்கினால் இடையில் கீழேவைக்க மனம்வராது. அவ்வளவு இனிமையை விளைவிக்கும். உள்ளுறை விஷயத்தால் மனத்தைக்கவர்வதுபோல வெளிப்பார்வையால் கண்ணைக்கவரும்படி யுள்ளது. இதன் விலை அணா 10. யாவரும் வாங்கி வாசித்து மகிழ்வார்களாக.

பத்திராதிபர்.